<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.9/2023</u>

**<u>நாள் : 06.04.2026</u>**

**எ.ம.சா.** 2 (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சங்கீதா | மாவட்டம் | : | சென்னை |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.ராமசந்திரன் | வயது | : | 42 |
| ஊர் | : | சென்னை | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | சென்னை | தேசியம் | : | இந்தியன் |

நான் சோழமண்டலம் இன்சூரன்ஸ் நிறுவத்தினல் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி நிறுவனத்தின் துணை மேலாளர் என்ற முறையில் அன்றாட நடவடிக்கைகள் எனக்கு பரிச்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் காப்பீட்டு பாலிசி நகல் எ.ம.சா.ஆ.2

2. 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் புலன் விசாரணை அறிக்கை எ.ம.சா.ஆ.3

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் TN 83 MA 0311 என்ற Royal Enfield வாகனமானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்து சமயத்தில் மனுதாரர் ராயல் என்பீல்டு வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். பொலிரோ பிக்கப் வாகனமும், ராயல் என்பீல்டு வாகனமும் எதிரெதிர் திசையில் வந்தனர் என்றால் சரிதான். இரண்டும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் அவ்வாறாக தெரியவில்லை. சாட்சியிடம் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை காட்டப்பட்டு "நாட்றம்பள்ளியிலிருந்து வந்த பொலிரோ வாகனம் எதிர் திசையில் வந்த இருசக்கர வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக" கண்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் எங்களது காப்பீட்டு நிறுவனத்திற்கு மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் தற்சார்பு கவனமின்மையும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. மனுதாரர் மூன்றாம் தரப்பினர் என்பதால் எங்களது நிறுவனம் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.